# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.367/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அரவிந்தன் | த-பெ | ராமசாமி செட்டியார் |
| ஊர்: | : | திருச்சி | | |
| வயது: | : | 55/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | நகை அடகு கடை உரிமையாளர் | மாவட்டம் | திருச்சி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.05.2026

1 ம் **எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் திருச்சியில் வசித்து நகை அடகு கடை உரிமையாளராக வேலை செய்து வருகிறேன். 2005 ம் ஆண்டு நான் திருச்சி TVS டோல்கேட்டில் அம்பாள் அடகு கடை வைத்து தொழில் செய்து வந்தேன். பொதுவாக என்னிடம் சங்கீதா என்பவர் வரவு செலவு வைத்திருந்தார். அப்போது அவருடைய தம்பி சரத்குமார் என்று ஒரு நபரை என்னிடம் அறிமுகம் செய்து அவர் வரவு செலவு என்னிடம் மேற்கொண்டார் அவர் ஆஜர் எதிரி ஆவார். ஒரு மாதத்திற்கு பிறகு காவல்துறையில் இருந்து கடைக்கு வந்து என்னை விசாரணை செய்தார்கள். அப்போது மேற்படி சரத்குமாரை போலீசார் அழைத்து வந்து என்னிடம் அவரிடம் நகையை வாங்கினீர்களா என்று கேட்டார்கள் நான் வாங்கினேன் என்று ஒத்துக்கொண்டேன். மேற்படி நகையினை பறிமுதல் செய்து போலீசார் சென்றுவிட்டார்கள். பின்னர் மறுநாள் என்னை நீதிமன்றத்திற்கு வர சொன்னார்கள். போலீசார் வழக்கு சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள். போலீசார் சம்பவ சமயத்தில் காரைக்குடியில் இருந்து மேற்படி நகைகளை எடுத்ததாக சொன்னார்கள்.

**குறுக்கு விசாரணை**

சங்கீதா என்பவரின் கணவர் பெயர், முகவரி தெரியுமா என்றால் அவர் கணவர் பெயர் குமார் அவர் திருச்சியில் உள்ள அண்ணாதெருவில் வசிப்பதாக சொன்னார். அன்றைய தினம் எத்தனை நகைகளை கைப்பற்றினார்கள் என்றால் ஒரு செயின் மட்டுமே கைப்பற்றினார்கள். என்னை போலீசார் விசாரணை செய்து என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். சங்கீதா என்ற பெண் தான் அடமானம் வைத்ததாக போலீசார் விசாரணையில் சொல்லியிருந்தால் அது தவறு. என்னுடைய நகை கடையில் நகை அடமானம் பெறும்போது அடகு வைத்தவரின் பெயர் ரசீதில் இருக்கும் என்றால் சரிதான். நான் மேற்படி ரசீதை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை.

அடிக்கட்டையும் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தற்போது எதிரியை தெரியும் என்றும் அவரிடம் தான் நகை அடமானம் பெற்றேன் என்றும் போலீசாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.24 11:09:12 +0530

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.367/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முகமது ரிஸ்வான் | த-பெ | மகபூர்கான் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 36/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் பயிற்சி பள்ளி | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.05.2026

1 ம் **எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் ஆசிரியராக பணி செய்து வருகிறேன். கடந்த 12.06.2015 அன்று இரவு 8.00-8.30 மணியளவில் நான் 100 அடி சாலையில் உள்ள எனது அலுவலகத்தில் இருந்தேன். அப்போது பக்கத்து வீட்டில் குடியிருந்த ஜெயா என்பவர் எனக்கு போனில் தொடர்பு கொண்டு எனது அம்மா கழுத்தில் அணிந்திருந்த 10 ½ பவுன் தங்க செயினை நபர்கள் அறுத்து சென்றதாக சொன்னார். நான் அந்த சம்பவத்தை கேள்வி பட்டு அங்கு சென்று பார்த்தேன். அப்போது எனது அம்மாவிற்கு கழுத்திலும் வலது காலின் சுண்டு விரலிலும் சிறிய காயம் ஏற்பட்டிருந்தது. அருகில் இருந்த மருத்துவரிடம் முதலுதவி சிகிச்சை பெற்று காரைக்குடி குற்றப்பிரிவு காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி எனது அம்மா புகார் அளித்தபோது நான் உடன் இருந்தேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

புகாரை யார் எழுதியது என்றால் போலீசார் எழுதி கொண்டார்கள். போலீசார் எங்கு விசாரணை செய்தார்கள் என்றால் என்னை விசாரணை செய்யவில்லை. விசாரணையின்போது எனது அம்மாவிற்கு கழுத்தில், காலில் காயம் ஏற்பட்ட விபரத்தையோ தாயாரை இழுத்து சென்றதாகவோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரிலோ போலீசார் விசாரணையிலோ செயினின் அடையாளத்தையோ அதை வாங்கியதற்கான ரசீதையோ சொல்லவில்லை என்றால் செயினின் அடையாளம் எனக்கு தெரியாது செயின் வாங்கிய ரசீதை கொடுக்கவில்லை. சம்பவம்

எப்படி நடந்தது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.24 11:09:19 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.367/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மகபூர்கான் | த-பெ | ராஜாமுகமது |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 60/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் பயிற்சி பள்ளி | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.05.2026

1 ம் **எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் ஆசிரியராக பணி செய்து வருகிறேன். கடந்த 12.06.2015 அன்று நான் 100 அடி சாலையில் உள்ள எனது அலுவலகத்தில் இருந்தேன். அப்போது பக்கத்து வீட்டில் குடியிருந்த ஜெயா என்பவர் எனக்கு போனில் தொடர்பு கொண்டு எனது மனைவி கழுத்தில் அணிந்திருந்த 10 1/2 பவுன் தங்க செயினை நபர்கள் அறுத்து சென்றதாக சொன்னார். நான் அந்த சம்பவத்தை கேள்வி பட்டு அங்கு சென்று பார்த்தேன். அப்போது எனது மனைவிக்கு கழுத்திலும் வலது காலின் சுண்டு விரலிலும் சிறிய காயம் ஏற்பட்டிருந்தது. அருகில் இருந்த மருத்துவரிடம் முதலுதவி சிகிச்சை பெற்று காரைக்குடி குற்றப்பிரிவு காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி எனது மனைவி புகார் அளித்தபோது நான் உடன் இருந்தேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

புகாரை யார் எழுதியது என்றால் நியாபகம் இல்லை. போலீசார் எங்கு விசாரணை செய்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். விசாரணையின்போது எனது மனைவிக்கு கழுத்தில், காலில் காயம் ஏற்பட்ட விபரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரிலோ போலீசார் விசாரணையிலோ செயினின் அடையாளத்தையோ அதை வாங்கியதற்கான ரசீதையோ சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் எப்படி நடந்தது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.05.24 11:09:24 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.